**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.105/2023**

**Deposition of P.W.** 1

Name : செல்வராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**23.10.2024**

Accused absent. Petition field and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்னர் புதுக்கடை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது திருட்டு வழக்கு தொடர்பாக எதிரிகளை தேடி மார்த்தாண்டம் காவல்நிலையம் சென்ற போது இரண்டு நபர்களை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார்கள். அதனை தெரிந்து கொண்டு விசாரித்து விட்டு சென்று விட்டேன். எதிரியை நான் தான் காட்டி கொடுத்தாக நினைத்து 14.09.2001ம் தேதி நாகர்கோவில் சென்று விட்டு வரும் போது வீட்டில் சாப்பிட்டு விட்டு காவல்நிலையம் செல்ல வெள்ளிக்கோடு சந்திப்பு வந்தேன். நான் திருப்பத்தில் திரும்புவதற்காக நின்று கொண்டிருந்த போது ஒரு ஆட்டோ மேற்கிலிருந்து – கிழக்காக வந்தது. அதை ஓட்டி வந்த தும்பையன் தோட்டத்தை சேர்ந்த கிறிஸ்துதாஸ் மகன் ஷெர்லின் மற்றும் மருதூர்குறிச்சியை சேர்ந்த அல்பர்ட், புலிப்பனத்தை சேர்ந்த டேவிட் மற்றும் 3 பேர் அந்த ஆட்டோவில் இருந்தனர். எதிரிகள் என்னை கண்டதும் மேற்படி ஷெர்லின் திருட்டு வழக்கில் காட்டி கொடுத்த தேவிடியாபயன் அங்கு நின்று கொண்டிருக்கிறான் என்று சொல்லி ஆட்டோவை என் மீது ஏற்றி

கொல்ல வந்தார்கள். நான் சத்தம் போட்டு பள்ளி காம்பவுண்ட் பக்கம் ஓடி விட்டேன். மூவரும் சேர்ந்து ஆட்டோவிலிருந்து இறங்கி வந்து என்னுடைய சட்டையை பிடித்து கொண்டு கெட்ட வார்த்தை பேசிக்கொண்டு முதுகில் குத்தினார். அல்பர்ட் என்னை அடி வயிற்றில் காலால் மிதித்தான். டேவிட் முதுகிலும், மார்பிலும் என்னை மாறி மாறி குத்தினான். ஷெர்லின் அவர்களை பார்த்து ஏன் பார்த்து கொண்டிருக்கிறாய், ஆட்டோவில் உள்ள கத்தியை எடுத்து குத்தி கிழி என்று சொன்னார். அவர்கள் கத்தியை எடுத்து கொண்டு வரும் போது என்னை காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டேன், அந்த பகுதியை சேர்ந்த மிக்கேல் மகன் அமல் சத்தியதாஸ் மற்றும் காட்டாத்துறை டவுண் பஞ்சாயத்து உறுப்பினர் மற்றும் பலரும் ஓடி வரவும் ஆட்டோவிலிருந்து இரண்டு பேர் அரிவாளை எடுத்து எங்களை யாராவது பிடிக்க நினைத்தால் தலை இங்கே உருளும் என்று மிரட்டினார்கள். அரிவாளால் ரோட்டில் உரசி தீப்பொறி பறக்க செய்தார்கள். பின்னர் ஆட்டோவில் ஏறி கிழக்கு பார்த்து ஓடி விட்டார்கள். சாலையின் இருபுறமும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு கடைகள் அடைக்கப்பட்டது. எதிரிகள் ஒன்று சேர்ந்து இம்முறை தப்பி விட்டாய், என்றாவது ஒரு நாள் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். நான் தக்கலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆட்டோவிலிருந்து வெளியே வந்த மூன்று பேரை தவிர மீதம் ஆட்டோவில் இருந்த நபர்களை எனக்கு யார் என்று தெரியாது. போலீசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் சொன்னேன்.